# அக்டோபர் – 05 – வியாழன்

### புனித மரிய பவுஸ்தீனா கொவலஸ்கா

### ஆண்டவரின் நியமங்கள் சரியானவை: அவை இதயத்தை மகிழ்விக்கின்றன. திபா. 19:8

## முதல் வாசகம் : நெகேமியா 8 : 1 - 12

மக்கள் அனைவரும், ஒரே ஆளென, தண்ணீர் வாயிலுக்கு எதிரே இருந்த வளாகத்தில் ஒன்றுகூடினர். ஆண்டவர் இஸ்ரயேலுக்குக் கொடுத்த மோசேயின் திருநூலைக் கொண்டுவருமாறு திருநூல் வல்லுநர் எஸ்ராவை வேண்டினர்.அவ்வாறே ஏழாம் மாதம் முதல்நாள் குரு எஸ்ரா ஆடவர், பெண்டிர், புரிந்துகொள்ளும் ஆற்றலுள்ள சிறுவர் அனைவரும் அடங்கிய சபை முன்னிலயில் திருநூலைக் கொண்டு வந்தார்.தண்ணீர் வாயிலுக்குமுன் இருந்த வளாகத்தில் காலைமுதல் நண்பகல்வரை ஆடவரையும், பெண்டிரையும், புரிந்து கொள்ளும் ஆற்றலுள்ள சிறுவரையும் பார்த்து அதை உரக்க வாசித்தார். எல்லா மக்களும் திருநூலுக்குச் செவி கொடுத்தனர். திருநூல் வல்லுநரான எஸ்ராவோ இதற்காகச் செய்யப்பட்ட மர மேடையின்மேல் நின்றுகொண்டிருந்தார். அவருக்கு அருகே வலப்பக்கத்தில் மத்தித்தியா, சேமா, அனாயா, உரியா, இல்க்கியா, மாசேயா ஆகியோரும், இடப்பக்கத்தில் பெதாயா, மிசாவேல், மல்கியா, ஆசும், அசுபதீனா, செக்கரியா, மெசுல்லாம் ஆகியோரும் நின்று கொண்டிருந்தார்கள்.ஸ்ரா மக்களை விட உயரமான இடத்தில் நின்றதால் அவர் திருநூலைத் திறந்தபோது எல்லா மக்களும் அதைப் பார்த்தார்கள் திருநூலைத் திறந்தபோது எல்லா மக்களும் எழுந்து நின்றார்கள்.அப்பொழுது எஸ்ரா மாபெரும் கடவுளாகிய ஆண்டவரை வாழ்த்தினார். மக்கள் எல்லாரும் கைகளை உயர்த்தி "ஆமென்! ஆமென்!" என்று பதிலுரைத்தார்கள் பணிந்து, முகங்குப்புற விழுந்து ஆண்டவரைத் தொழுதார்கள்.மேலும் லேவியரான ஏசுவா, பானி, செரேபியா, யாமின், கூபு, சபத்தாய், ஓதியா, மாசேயா, கெலிற்றா, அசரியா, யோசபாத்து, அனான், பெலாயா ஆகியோர் சட்டத்தை மக்களுக்கு விளக்கினார்கள். மக்கள் அங்கேயே நின்று கொண்டிருந்தார்கள்.மக்களுக்குப் புரியும்படி தெளிவாகவும், பொருளோடும் கடவுளின் திருச்சட்டத்தை உரக்க வாசித்தார்கள். ஆதலால் மக்களும் வாசிக்கப்பட்டதன் பொருளைப் புரிந்து கொண்டனர். ஆளுநர் நெகேமியாவும், குருவும் திருநூல் வல்லுநருமான எஸ்ராவும், விளக்கம் கூறிய லேவியர்களும் மக்கள் அனைவரையும் நோக்கி "இன்று கடவுளாகிய ஆண்டவரின் புனித நாள் எனவே நீங்கள் அழுதுபுலம்ப வேண்டாம்" என்றனர். ஏனெனில் மக்கள் அனைவரும் திருச்சட்டத்தின் சொற்களைக் கேட்டதிலிருந்து அழுது கொண்டிருந்தார்கள். அவர் அவர்களைப் பார்த்து, "நீங்கள் போய்க் கொழுத்தவற்றை உண்டு, இனிய திராட்சை இரசத்தைக் குடியுங்கள் எதுவும் தயார் செய்யாதவருக்குச் சிறிது அனுப்பிவையுங்கள். ஏனென்றால், நம் ஆண்டவரின் புனித நாள் இதுவே் எனவே வருந்த வேண்டாம் ஏனெனில் ஆண்டவரின் மகிழ்வே உங்களது வலிமை" என்று கூறினார்.எனவே லேவியர் எல்லா மக்களையும் நோக்கி, "அமைதியாயிருங்கள் ஏனெனில் இன்று புனித நாள், துயரம் கொள்ளாதீர்கள்" எனச் சொல்லி அழுகையை அமர்த்தினார்கள்.எல்லா மக்களும் அவர்களுக்குக் கூறப்பட்ட வார்த்தைகளைப் புரிந்துகொண்டதால், உண்ணவும், குடிக்கவும், உணவு அனுப்பவும், மகிழ்ச்சி கொண்டாடவும் புறப்பட்டுச் சென்றார்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவரின் நியமங்கள் சரியானவை
இதயத்தை மகிழ்விப்பவை

## நற்செய்தி : லூக்கா 10 : 1 - 12

அக்காலத்தில் இயேசு வேறு எழுபத்திரண்டு பேரை நியமித்து, அவர்களைத் தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் தமக்கு முன்னே இருவர் இருவராக அனுப்பினார்.அப்போது அவர் அவர்களை நோக்கிக் கூறியது "அறுவடை மிகுதி வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்.புறப்பட்டுப் போங்கள் ஓநாய்களிடையே ஆட்டுக் குட்டிகளை அனுப்புவதுபோல் உங்களை நான் அனுப்புகிறேன்.பணப்பையோ வேறு பையோ மிதியடிகளோ எதுவும் நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டாம் வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம்.நீங்கள் எந்த வீட்டுக்குள் சென்றாலும், "இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக!" என முதலில் கூறுங்கள்.அமைதியை விரும்புபவர் அங்கு இருந்தால், நீங்கள் வாழ்த்திக் கூறிய அமைதி அவரிடம் தங்கும் இல்லாவிட்டால் அது உங்களிடமே திரும்பிவிடும்.அவர்களிடம் உள்ளதை நீங்கள் உண்டு குடித்து அந்த வீட்டிலேயே தங்கியிருங்கள். ஏனெனில் வேலையாளர் தம் கூலிக்கு உரிமை உடையவரே் வீடுவீடாய்ச் செல்ல வேண்டாம்.நீங்கள் செல்லும் ஊரில் உங்களை ஏற்றுக்கொண்டால் உங்களுக்குப் பரிமாறுவதை உண்ணுங்கள்.அங்கு உடல் நலம் குன்றியோரைக் குணமாக்கி, இறையாட்சி அவர்களை நெருங்கி வந்துவிட்டது எனச் சொல்லுங்கள்.நீங்கள் செல்லும் ஊரில் உங்களை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அதன் வீதிகளில் சென்று,"எங்கள் கால்களில் ஒட்டியுள்ள உங்கள் ஊர்த் தூசியையும் உங்களுக்கு எதிராக உதறிவிடுகிறோம். ஆயினும் இறையாட்சி நெருங்கி வந்து விட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள்" எனச் சொல்லுங்கள்.அந்த நாளில் அவ்வூர் பெறும் தண்டனை சோதோம் நகரினர் பெறும் தண்டனையை விட கடினமாகவே இருக்கும் என உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார்.

**தியானம்:** நாம் கட்டிக்கொண்ட பாவங்களின் நிமித்தம் இறைவனை விட்டு விலகி உலக மாயக் கவர்ச்சிகள், தீய செயற்பாடுகள், கூடாத தொடர்புகள், இவற்றின் மூலம் தற்கொலைகள், கோர விபத்துக்கள், இயற்கை அழிவுகள், இவ்வாறானவை எம்மத்தியில் தொடர்ந்து காணப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆனால் நாங்களோ அதைச் சித்திப்பதில்லை. நடந்த நிகழ்வுகளை ஒரு சில தினங்கள் அதைப்பற்றி பேசிக்கொள்கின்றோம். பின்பு அது அப்படியே மறைந்துவிடுகின்றது. சிந்தித்து எம்மை மாற்றியவர்காக இறைவன்மேல் நம்பிக்கை கொண்டு வாழ்வோமேயானால் எவ்வாறான தீங்கிலிருந்தும் அவர் எங்களைப் பாதுகாப்பார். " நீர் நிலைகள் வழியாக செல்லும் பொழுது நான் உன்னோடு இருப்பேன், ஆறுகளைக் கடக்கும் போது அது உன்னை மூழ்கடிக்க மாட்டார், தீயில் நடந்தாலும் சுட்டெரிக்கப்பட மாட்டாய்" (எசா. 43:2) மாறாக இறைவனின் கட்டளைகளை, நியமங்களையும் கடைப்பிடித்து வாழாமல் பாவவாழ்வு வாழ்வோமேயானால் எமக்கு அழிவு உறுதியே. நாங்கள் இறைவனுக்கேற்ற வாழ்வு வாழ்ந்தோமேயானால் அன்று சீடர்களை அழைத்து தம்மைப்மைப் பற்றி அறிவிக்க, அவர்களை மனமாற்றமடைய அனுப்பி வைத்தாரோ, அதேபோன்று எங்களையும் அழைத்து அனுப்பியுள்ளார். அவ்வேளையில் பலவிதமான துன்பங்கள், ஏமாற்றங்கள், வேதனைக்குரிய சம்பவங்கள் ஏற்படும். எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு நாங்கள் செயற்பட வேண்டும். "ஓநாய்களுக்கிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவது போன்று உங்களை நான் அனுப்புகின்றேன்" (லூக். 10:3). இயேசு சீடர்களை அனுப்பியது போன்று எங்களையும் அவர் அனுப்புகிறார். சீடர்கள் செயற்படுத்துவது போன்று நாங்கள் செயற்படுகின்றோமா?